செய்தித்தாள்:மாலைமலர்    பக்கம்:3    நாள்:06.09.2017




விழாவில் ஆசிரியருக்கு பரிசு வழங்கியபோது எடுத்தபடம்.

திருத்துறைப்பூண்டி

# சாய்ராம் பள்ளியில் ஆசிரியர் தினவிழா

திருத்துறைப்பூண்டி, செப்.6-

திருத்துறைப்பூண்டி சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. விழாவில் பள்ளி முதல்வர் செல்லதுரை தலைமையேற்றார். நிருவாக பிரதிநிதி சோமசுந்தரம் முன்னிலை வகித்தார். தலைமை ஆசிரியை லட்சுமிபிரியா வரவேற்றார். இதில் மாணவர்கள் வரவேற்பு பரதநாட்டியம் உட்பட பல கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.சிறப்பு விருந்தினராக வழக்கறிஞர் தர்மராஜன், பொறியாளர் செல்வகணபதி மற்றும் மனவளக்கலைமன்ற பேராசிரியர் மாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டார்கள். கடந்த ஆண்டில் மாணவர்கள் நூறு சதவிகிதம் தேர்ச்சி மற்றும் அதிக மதிப்பெண் பெற செய்த ஆசிரியர்களுக்கும் பரிசு, காசோலைகள் மற்றும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அனைத்து பணியாளர்களுக்கும் வெகுமதி தொகையும் வழங்கப்பட்டது. இறுதியில் உதவி தலைமை ஆசிரியை சவுந்தர்ய சத்யா நன்றி கூறினார்.